## வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் (அரச கம்பனி) 2016 /17

-----------------------------------------------------------------------------------------------

லங்கா பொஸ்பேற் (அரச) கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதும் கம்பனியின் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பெருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாக தேவையான உள்ளகக் கட்டுப்பட்டினை நிர்ணயித்தல் பணிப்பாளர் சபையின் (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை மூலம் 2017 மார்ச் 31 திகதியில் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் கம்பனியின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

**இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணமானது நியமத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் மீளமதிப்பிடப்பட்டிருக்காமையால் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 328,289,853 கூட்டுத்தொகையான கொண்டு செல்லும் பெறுமதியுடனான சொத்துக்களின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமம் 37 இன் பிரகாரம், நிறுவனமொன்றின் செயற்பாடுகளில் ஒரே தன்மையுடைய மற்றும் ஒரே பாவனையிலுள்ள சொத்துக்கள் ஒரே தொகுதியின் கீழ் இனங்காணப்பட வேண்டியபோதும் அதற்கு முரணாக வேறுபட்ட பொருளாதார ஆயுள் காலத்தையுடைய பல்வேறு தன்மையுள்ள ரூபா 11,283,522 கிரயமான சொத்துக்கள் நானாவித சொத்துக்களாக இனங்கண்டு நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதனால், கணிக்கப்பட்ட வருடாந்த பெறுமானத்தேய்வு பெறுமதி பிழையாகவிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டுடன் தொடர்பாக இயந்திரம் மற்றும் உபகரணத்தின் கொள்வனவிற்கான ரூபா 3,055,620 தொகையான செலவினமொன்றும் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கிற்கு எடுத்துவரப்பட்டிருந்தது.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வால் பெறப்பட்ட நேரடி உறுதிப்படுத்தல்களின் மீதிகளிற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிகளிற்கும் இடையில் கீழ் குறிப்பிட்டவாறு ரூபா 1,192,594 கூட்டுத்தொகையான மீதிகளிலிருந்தது.

| கடன்பட்டோர் நிறுவனம் | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| அரச மரநடுகைக் கூட்டுத்தாபனம் | 1,237,280 | 1,684,528 | 447,248 |
| தேயிலை சக்தி நிதியம் | 79,200 | - | 79,200 |
| வரையறுக்கப்பட்ட லங்கா பேட்டிலைசர் கம்பனி | 666,146 | - | 666,146 |
| | | | 1,192,594 |

(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் நீண்ட காலத்திற்கு மேலாக தொடர்ச்சியாகவிருந்த கடன்பட்டோர் உப பேரேட்டில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையே ரூபா 240,397 வித்தியாசமிருந்தது.

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

2017 மார்ச் 31 இல் உள்ளவாறான ரூபா 43,903,244 தொகையான கடன்பட்டோர்கள் மீதி 5 வருடங்களிற்கு மேலாகவுள்ள ரூபா 8,414,141 கூட்டுத்தொகையான மீதிகளை உள்ளடக்கியிருந்ததுடன் அந்த மீதிகளை அறவிடுவதற்கோ தீர்ப்பனவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 போதிய அதிகாரத்தால் ஆதரவழிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடி/3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு மேலதிக படிகளிலிருந்து வேறுபட்ட ஏனைய படிகள் தொடர்பாக வரிசை அமைச்சின் சிபாரிசுகள் தொடர்பாக நிதி விடயத்துடன் தொடர்பான அமைச்சிடமிருந்து அனுமதி பெறவேண்டும். இருந்தபோதிலும், அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல், கம்பனியின் தலைவர் மற்றும் நிறைவேற்று இயக்குனரின் வருகை தொடர்பில் மீளாய்வாண்டின் போது நாளொன்றிற்கு ரூபா 2,000 வீதம் வருகை படிகளாக ரூபா 352,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடி/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையால் மேவுகை செய்யப்படாத 09 அலுவலர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 138,000 தொகைக்கான போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவைக்காக அரச நிதி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட 19 குறைநிரப்பு பிரேரணை | வாகனம் பழுதுபார்த்தல் செலவுகள் ரூபா 200,000 இனை மிகைக்குமிடத்து அமைச்சுக் செயலாளரிடம் தனிப்பட்ட முறையில் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இருந்தபோதிலும், அதற்கு முரணாக ரூபா 3,502,931 தொகையான பழுதுபார்த்தல் 03 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 26,586,534 தொகையுடன் ஒப்பிடும்போது ரூபா 10,533,931 இற்கான நட்டத்தைக் காட்டியதுடன் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 37,120,465 ஆன பின்னடைவொன்று காணப்பட்டது. நிர்வாக மேந்தலைக் கிரயம் மற்றும் வருமான வரி முறையே ரூபா 23,098,023 மற்றும் ரூபா 55,780,952 தொகையால் குறைவடைந்தமை, மொத்த இலாபம் ரூபா 125,627,433 ஆல் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட பின்னடைவிற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 வருடங்களின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013/2014 ஆம் நிதியாண்டில் ரூபா 134,385,026 மிகையானது 2015/2016 ஆம் ஆண்டில் ரூபா 26,586,834 வரை பின்னடைவிலிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இது ரூபா 10,533,931 நட்டத்திற்கு திரும்பியது. எனினும், அரசாங்க வரி, ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறைச் சொத்துக்களுக்குள்ளான பெறுமானத்தேய்வினை கவனத்தில் எடுத்த பின்னர் கம்பனியின் 2013/2014 ஆண்டிற்கான பங்களிப்பு ரூபா 338,932,189 தொகையானதுடன் கம்பனியின் பங்களிப்பானது 2015/2016 ஆம் ஆண்டில் ரூபா 293,879,067 இலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 255,409,411 வரைக்கும் தொடர்ச்சியான வீழ்ச்சியான போக்கில் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது கம்பனியின் பிரதான உற்பத்திகளின் பங்களிப்பு கீழே தரப்படுகின்றன.

| உற்பத்தி | 2016/17 பங்களிப்பு | 2015/16 பங்களிப்பு |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| ஈஆர்பி | 263,439,441 | 424,242,325 |
| எச்ஈஆர்பி | 78,840,900 | 92,069,620 |
| தேங்காய் உரம் | 23,813,360 | 46,424,398 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஈஆர்பி மற்றும் எச்ஈஆர்பி ஆல் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு ரூபா 174,031,604 ஆல் அல்லது 34 சதவீதத்தால் குறைவடைந்ததுடன் தேயிலை உரத்தால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 22,611,038 ஆல் அல்லது 49 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விற்பனை வருமானம் படிப்படியாக குறைவடைந்தமையால் கம்பனியின் சாதாரண பங்கிற்கான உழைப்பானது 3.67 இலிருந்து மறை 1.45 இற்கு குறைவடைந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 25 மில்லியன் நிலையான வைப்புக்களை கம்பனியானது மீளப்பெற்றிருந்ததுடன் நிலையான வைப்புக்களை பிணையாக வைப்பதன் மூலம் ரூபா 25 மில்லியன் தொகையான வங்கி கடன் பெறப்பட்டிருந்ததுடன் அந்த தொகையில் ரூபா 24,979,533 தொகை மீளாய்வாண்டில் இறுதியில் செலுத்த வேண்டியவையாகவிருந்தது பிரதான வணிக நடவடிக்கைகளினூடாக வருமானத்தை உழைக்கும் சாத்தியத் தன்மையில் ஏற்பட்ட படிப்படியான குறைவு இந்த நிலைமைக்கு மிகவும் பங்களித்திருந்தது. அதற்கிணங்க, கம்பனியானது ஆகக்குறைந்தது அதனுடைய செயற்பாட்டு நடவடிக்கைகளை பராமரிப்பதற்கு போதிய வருமான மட்டத்தை பராமரிப்பதிலுள்ள தவறின் இடரை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றுகை

தற்காலத்தில் (ஈஆர்பி/எச்ஈஆர்பி) 02 அடிப்படை உற்பத்திகள் தென்னை உரம் போன்ற ஏனைய அடிப்படை தன்மையுள்ள உற்பத்தி போன்றவற்றை உற்பத்தி செய்கின்ற நீண்டகால பயிர்களிற்காக உரமாக பயன்படுத்தப்படுகின்ற பொஸ்பற் இனை சுரண்டுதல், செய்முறைப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் நோக்கத்துடன் 1992 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பற் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டது. எச்ஈஆர்பி உரமானது கராம்பு மற்றும் மிளகு போன்ற சிறிய ஏற்றுமதி பயிர்களிற்காக பயன்படுத்தப்படுகின்ற அதேநேரம் ஈஆர்பி உரமானது தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு போன்ற நீண்டகாலப் பயிர்களிற்காக பிரயோகிக்கப்படுகின்றது.

கம்பனியின் செயலாற்றல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கையில் பிரதான விவசாய பயிராகவுள்ள நெற்பயிர்ச் செய்கைக்காக மேற்கூறப்பட்ட உரங்கள் பயன்படுத்த முடியாததாக இருந்த போதிலும், இந்தக் கனிப்பொருளானது நெற்பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்திய ரிவில் பொஸ்பற் (Triple Phospate) போன்ற இரசாயன உரங்களின் உற்பத்திகளிற்காக பயன்படுத்த முடியும். இருந்தபோதிலும், இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன், இலங்கையிலுள்ள இயற்கை வளங்களின் அளவு, வெளிநாடுகளிற்கான வெளிநாட்டு நாணயமாற்றின் வெளிப்பாய்ச்சல்கள் றிவில் சூப்பர் பொஸ்பற் இன் இறக்குமதிக்காக வருடாந்தம் எடுத்துச் செல்லப்படுகின்றது.

(ஆ) அபிறிற் இன் பயன்பாட்டுடன் ஏனைய உற்பத்திகளை உற்பத்தி செய்ய முடியுமாக இருந்தபோதும் பின்வருமாறு கனிப்பொருட்களை பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களிலிருந்ததுடன் அத்தகைய சந்தர்ப்பங்களை பயன்படுத்துவதற்கு கம்பனியானது நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(i) மிருக உணவுகளை உற்பத்தி செய்தல்.
(ii) நீர் உறிஞ்சும் பொருட்களை உற்பத்தி செய்தல்.
(iii) மின் முலாமிடல்.
(iv) மட்பாண்டத்தை உற்பத்தி செய்தல்.
(v) சாய வகைகளை உற்பத்தி செய்தல்.
(vi) இறப்பர் கைத்தொழில்களை பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்.

(இ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் உற்பத்தி மற்றும் விற்பனைகள் பின்வருமாறுள்ளது.

| விடயம் | 2015/2016 | | 2016/2017 | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி (எம்.ரீ) | விற்பனைகள் (எம்.ரீ) | உற்பத்தி (எம்.ரீ) | விற்பனைகள் (எம்.ரீ) |
| ஈஆர்பி | 45,216 | 47,144 | 28,318 | 27,736 |
| எச்ஈஆர்பி | 8,446 | 7,961 | 6,497 | 6,784 |
| மொத்த உற்பத்தி விற்பனைகள் (எம்.ரீ) | 53,662 | 55,105 | 34,815 | 34,520 |
| மொத்த உற்பத்தி கிரயம் மற்றும் விற்பனை பெறுமதி (ரூபா) | 214,697,465 | 515,851,225 | 253,160,119 | 341,510,811 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஈஆர்பி மற்றும் எச்ஈஆர்பி உற்பத்தி 18,847 மெற்றிக் தொன்களால் அல்லது 35 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதும் மொத்த உற்பத்தி 15 சதவீதத்தால் மாத்திரமே குறைவடைந்திருந்தது. மொத்த உற்பத்தி கிரயம் குறைவடைந்திருந்த போதிலும் அலகிற்கான உற்பத்தி கிரயம் அதிகரித்திருந்ததுடன் பல்வேறு பட்ட அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் தொடர்பில் அறவிடப்பட்ட ஊழியர் சம்பளம், அதிகமான பராமரிப்பு செலவினங்கள் மற்றும் வரியை உள்ளடக்கிய ஏனைய செலவினம் அதிகரித்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 439 ஆல் மூலப்பொருட்களின் மெற்றிக் தொன் அலகொன்றிற்காக உற்பத்தி கிரயத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு பிரதானமாக பங்களித்திருந்தது. மேற்கூறப்பட்ட நிலைமையின் விளைவால், கம்பனியானது ஏற்கனவே நிதிசார் நட்டத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் இந்த நிலைமையானது எதிர்காலத்தில் மேலும் மோசமாக்கும், ஆகையால் திறைசேரிக்குரிய பங்குலாபத்தின் கொடுப்பனவில் கஷ்டங்களை விளைவிக்கின்றது. அதற்கிணங்க, அடிப்படை வடிவ உற்பத்தியில் மாத்திரம் தனியாக தங்காமல் காலநிலை மற்றும் அரசாங்கத்தின் ஆதரவின் கீழுள்ள அரச கொள்கை மாற்றங்களையும் எதிர்கொள்ளும் வகையில் வேகமாக பெறுமதி சேர் உற்பத்தியை நோக்கி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) உற்பத்தி மற்றும் விற்பனைகள் அதிகரித்தல், புதிய சந்தை சந்தர்ப்பங்களை வழங்கல், வெளிநாட்டு நாணய மாற்றுக்களை சேகரித்தல், புதிய ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் அதிக தர சேவைகளை வழங்குதல், போன்ற நோக்கங்களுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதும், அதனில் உள்ளடக்கப்பட்ட எந்த நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

மாதாந்த விற்பனை மற்றும் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட விஷேட நாளாந்த படிகள் விகிதங்கள் கூடிய நிலையிலுள்ள உத்தியோகத்தர்களிற்காக கூடிய பெறுமதியாக இருந்த அதே நேரம் குறைந்த நிலையுள்ள உத்தியோகத்தர்களுக்காக குறைந்த பெறுமதியாகவிருந்தது. அதற்கிணங்க, கூடிய நிலையிலுள்ள உத்தியோகத்தர்களிற்காக ரூபா 1,115 இலிருந்து ரூபா 2,387 வரையான விகிதங்களும் குறைந்த விகிதங்களாக ரூபா 333 இலிருந்து ரூபா 462 வரையும் உற்பத்திக்கு நேரடி பங்களிப்பை வழங்குகின்ற குழுவிற்காக செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மேற்கூறப்பட்ட நிலைமையானது ஊழியர்களின் வினைத்திறனை நேரடியாக பாதிக்ககூடுமென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டில் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,901,000 பெறுமதியான சில்லு ஏற்றும் இயந்திரங்களானது 14,349 மணித்தியாலங்கள் அகழ்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய பின்னர் செயற்பாடற்ற நிலையிலிருந்தது. 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது இயந்திரத்தின் திருத்தத்திற்காக ரூபா 4,243,799 தொகை செலவிட்டிருந்த போதும், இது 2015 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு திகதியான 2017 யூன் வரை பயன்படுத்தாமல் விளைவற்றிருந்தது. அதனால் சில்லு ஏற்றும் இயந்திரங்கள் வாடகையில் பெறவேண்டியிருந்ததுடன் அதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3,467,893 தொகை வெளித்தரப்பினருக்கு செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் எப்பவல இடங்களில் புதிய மில் இயந்திரங்களின் ஸ்தாபிப்பிற்காக உதிரிப்பாகங்களினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 43,453,115 தொகை செலவிட்டிருந்தது. அத்தகைய உதிரிப்பாகங்களில் ரூபா 17,234,953 பெறுமதியான உதிரிப்பாகங்கள் வேறுஇயந்திரங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 26,218,162 பெறுமதியான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து அறிக்கை திகதி வரை களஞ்சியங்களிலிருந்தது. அதற்கிணங்க, ரூபா 11,513,434 பெறுமதியான TGM 160 main mill உதிரிப்பாக எந்த இயந்திரங்களும் பயன்படுத்த முடிந்திருக்கவில்லையென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### உள்ளகக் கணக்காய்வு

உத்தியோகத்தர் ஒருவர் உள்ளகக் கணக்காய்வாளர் என இணைக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் உறுப்புரைகளின் பிரகாரம் போதுமான உள்ளகக் கணக்காய்வொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பலவீனங்கள் அவ்வப்போது கம்பனிகள் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) இருப்புக் கட்டுப்பாடு | மூலப்பொருட்களின் இருப்பு பெறுமதியை கணிப்பிடுவதற்காக விஷேட முறைமையை அறிமுகப்படுத்த தவறியமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | உயர்பெறுமதி தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன்னர் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்காமை. |
| (இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய பணத்தை தாமதிக்காமல் பெறத் தவறியமை மற்றும் அவற்றை கணக்குகளில் சரியாக பதிவு செய்யாமை. |
| (ஈ) கணக்கீடு | நாட்குறிப்பு பதிவுகளைப் பதிவதற்கான முறையான அதிகாரப் பரவாலாக்கத்திற்கு தவறியமை. |